
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 ஏப்ரல் - 2000 இதழ் - 4




அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும்,
உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்...... சங்கீதம் 143:8

## வாசகர்களின் கவனத்திற்கு

திருமறை ஆசான் மாத இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் தங்கள் பதிவு எண்ணைத் தவறாமல் குறிப்பிட்டு, தெளிவான முகவரியுடன் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

உங்களிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லையெனில் இதழ் நிறுத்தப்படும் என்பதை வேறு வழியின்றி வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தயவுசெய்து ஒத்துழையுங்கள்.



ஆசிரியர்.

### ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | **ஏலகிரி முகாம்** - மே 1,2,3 - 2000 | 08 |
| 3. | கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதெப்படி? | 09 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | வாலிபர் பகுதி | 15 |
| 6. | வெளிப்படுத்தின விசேஷம் | 18 |
| 7. | சிலுவையும், சபையும் | 24 |
| 8. | இச்சை என்ற பாவம் | 29 |
| 9. | விசுவாசத்தின் அடிப்படைகள்-3 | 31 |

# THIRUMARAI AASAAN


**Published by Church of Christ**

**Editor**
S. RAJANAYAGAM

**Honorary Editor**
J.C. CHOATE

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .13 April - 2000 Issue - 4**

*ஆசிரியவுரை*

## தேவனோடு சஞ்சரித்தான்

பரலோகத்தின் தேவனால், தமது ஆவியானவரைக் கொண்டு, எழுதிக்கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமத்தில், நிறைந்த நீதிமான்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளது. அவர்களின் நீதியான வாழ்க்கை பற்றி, அழகும், சிறப்பும்மிக்க வார்த்தைகளைக் கொண்டு வேதாகமம் விவரிக்கிறது. ஆம், நியாயப்பிரமாணங்களின் தந்தையாகிய மோசேயைப்பற்றி, ***"அவன் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான்"*** (எபி.3:5) என்று கூறுகிறது. அடுத்து, முற்பிதாக்களில் முதலாமவரான ஆபிரகாமை ***"விசுவாசிகளின் தகப்பன்"*** (ரோமர்4:17) என்றும், இஸ்ரவேலின் சரித்திரத்தில் வெற்றி இராஜாவாகத் திகழ்ந்த தாவீதை ***"என் இருதயத்துக்கேற்ற தாசன்"*** (அப்.13:22) என்றும் பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது.

அப்படியே, வேதாகமத்தை நாம் இன்னும் கொஞ்சம் கவனித்துப் பார்த்தால், மேற்சொன்ன தேவ மனிதர்களுக்கெல்லாம் பயன்படுத்தப்படாத, அதே சமயம், இன்னும் ஆழமான அர்த்தம் கொண்ட வேறொரு வார்த்தையும் இடம் பெற்றிருப்பதைக் காணமுடியும். அவ்வார்த்தை இரண்டே இரண்டு பேருக்குமாத்திரம் வேதாகமத்தில் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இருவருமே ஜலப்பிரளயத்திற்கு முன் வாழ்ந்தவர்களே. இந்த இருவரிலும் கூட, ஒரே ஒருவருக்குத்தான் இவ்வார்த்தை, இரண்டுமுறை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, அவன் எத்தனை ஆண்டுகள் சஞ்சரித்தான் என்ற விவரமும் கொடுக்கப்பட்டுள்ளது(ஆதி.5:22) அவரின் பெயர் தான் ஏனோக்கு (ஆதி.5:21,24) மற்றவரின் பெயர் நோவா (ஆதி.6:9)ஒருவேளை

புதிய ஏற்பாட்டில் *சஞ்சரித்தான்* என்ற வார்த்தை ஆபிரகாமுக்கும் பயன்படுத்தப் பட்டிருக்கிறதே (எபி.11:17) என்று நீங்கள் சொல்லக் கூடும். ஆனால், அங்கே, ஆபிரகாம், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் சஞ்சரித்தான் என்றுதான் உள்ளதே தவிர, தேவனோடு *சஞ்சரித்தான்* என்றில்லை என்பது கவனிக்கத்தக்கது.

ஆக, இவ்வகையில் ஏனோக்கு, தனக்குமுன்னும், பின்னும், இருந்த மற்ற எல்லாரையும் விட மிகவும் வித்தியாசமான தேவதாசனாக, தேவமனிதனாக இருந்துள்ளான். இவன் " 300 ஆண்டுகள் தேவனோடு *சஞ்சரித்தான்*" என்று வேதாகமம் கூறுகிறது. (ஆதி.5:22) எனக்கு மிகவும் பிரமிப்பூட்டக்கூடிய வேதபகுதி இது. சரி, சஞ்சரித்தல் என்றால் என்ன? ஆங்கில வேதாகமம் சஞ்சரித்தான் என்பதற்கு பதில், *நடந்தான்* என்று சொல்லுகிறது. ஆங்கில வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையைக் காட்டிலும் தமிழ் வேதாகமத்தில் உள்ள சஞ்சரித்தல் என்ற வார்த்தை பொருள் செறிந்த வார்த்தையாகக் காணப்படுகிறது. "*சஞ்சரித்தல்*" என்றால், "வாழ்தல்" என நாம் பொருள் கொள்ளமுடியும். அப்படியானால், ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான் என்பதற்கு பதில், அவன் தேவனோடு வாழ்ந்தான் என்று கூறமுடியும். பரலோகத்தில் இருக்கின்ற தேவனோடு பூமியிலிருந்த ஏனோக்கு வாழ்ந்துள்ளான். இது எப்படி சாத்தியம் என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், வாழ்ந்தான் என்று வேதாகமம் கூறுகிறது. ஆகவே, அவன் வாழ்ந்துதான் உள்ளான்.

தேவனோடு வாழ்வதற்கு ஏனோக்கு என்ன செய்திருப்பான் என நினைக்கிறீர்கள்? ஆமோஸ் தீர்க்கனின் ஒரு வசனத்தை இங்கே கவனியுங்கள். "*இரண்டுபேர் ஒரு மனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோக முடியாது*" (ஆமோஸ்3:3) ஒருமித்து நடப்பதற்கே ஒருமனம் தேவையானால், ஒருமித்து வாழ்வதற்கு? நிச்சயமாக இதைவிட மேலான நிலை வேண்டும். அதாவது, தேவன் அவனுக்கு கற்பித்து, அவனிடத்தில் எதிர்பார்த்த காரியங்களைக் காட்டிலும், மிக அதிகமான செயல்பாடு ள்ளவனாக அவன் இருந்திருக்கவேண்டும். ஆகவேதான், எபிரேய ஆசிரியர், ஏனோக்கு விசுவாசத்தினாலே எடுத்துக் கொள்ளப்பட்டான் என்று கூறுகிறார்.(எபி.11:5) இவ்வதிகாரத்தில், அநேகருடைய விசுவார்சமும், அதற்கான பலனும் பட்டியலிடப் பட்டிருக்கிறது. ஆனாலும், ஏனோக்கின் விசுவாசத்திற்கான பலன் மாத்திரம், ஏனைய அனைவரைக் காட்டிலும் வித்தியாசமாகவுள்ளது. விசுவாசத்தினிமித்தம் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளான் என்றுள்ளது.

எது எப்படியிருந்தாலும், இந்த ஏனோக்கு பற்றிப்பேசுவதற்கும், எழுதுவதற்கும் நம்மைப் போன்றவர்களுக்குத் தகுதி இருக்கிறதா என்றுகூட எண்ணத்தோன்றுகிறது. ஆயினும் இவன் வாழ்க்கை, வேதாகமத்தில் இடம்பெற்று, பழைய, புதிய ஏற்பாடுகளில், சிறப்பான அளவில் சொல்லப்பட்டிருப்பதால், இவனிடமிருந்து சில காரியங்களைக் கற்றுக் கொள்ள நாம் முயற்சிப்போம்.

## I.ஏனோக்கு நல்ல முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளான்

ஏனோக்கிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் முதல் பாடம், அம் மாமனிதர் நமக்கெல்லாம் விட்டுச்சென்றிருக்கும் முன்மாதிரியான வாழ்க்கை.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்தில், புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழும் நமக்கு, பழைய ஏற்பாடு என்ன நன்மை செய்கிறது என்று மிகத்தெளிவாகக் கூறியுள்ளார். தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும், நாம் நம்பிக்கை யுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது (ரோமர்.15:4)என்று.

ஆக, பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு மனிதரும், நமக்குச் சிலவற்றைப் போதிக்கிறார்கள். இன்னும் ஒவ்வொரு சம்பவமும் நமக்குச் சில காரியங்களைப் போதிக்கிறது. ஒருவேளை, அந்தப் போதனைகள் நமக்கு வழி காட்டுதலாகவோ அல்லது எச்சரிப்பாகவோ இருக்கக்கூடும். உதாரணமாக, காயீன், ஆபேல் பற்றிப் படிக்கும்போது, இரண்டு பேரிடமிருந்தும், இரண்டு வித்தியாசமான பாடங்கள் கிடைக்கிறது. ஒரு வகையில் இரண்டு பேருமே நமக்கு முன்னுதாரணமாக உள்ளனர். ஆபேல் விசுவாசத்திற்கும், காயீன் அவிசுவாசத்திற்கும் முன்னுதாரணம். (எபி.11:4)

இன்னும் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும், குறிப்பாக பவுலடியாரின் வாழ்க்கை நமக்கு மிகுந்த உற்சாகமும், நம்பிக்கையும் ஊட்டக்கூடியதாக உள்ளது. அதே நேரத்தில் சிலருடைய வாழ்க்கை நமக்கு எச்சரிப்பாகவும் கொடுக்கப்பட்டுள்ளது. பவுலடியாரால் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட நிருபத்தில் ***"இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனேயும், அலெக்சாந்தரும் அப்படிப்பட்டவர்கள். அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்"*** என்று உள்ளது. (1தீமோ.1:19,20). இப்படிப் பட்டவர்களும் வேதாகமத்தில் முன்னுதாரணமாகவே உள்ளனர்.

இப்பொழுது நாம் முந்நூறுஆண்டுகள் தேவனோடு சஞ்சரித்த மாமனிதனாகிய ஏனோக்குப் பற்றி பார்த்துக்கொண்டுள்ளோம். பரிசுத்த எழுத்துக்கள் அவன் முந்நூறு ஆண்டுகள் தேவனோடு வாழ்ந்தான் என்று சொல்லுகிறது. இவன் எந்த பாவமும் இல்லாமல் அந்த முந்நூறு

ஆண்டுகளும் வாழ்ந்தானா அல்லது விழுந்தாலும் உடனடியாக எழுந்து, தேவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்தானா என்று நமக்கு சரிவரச் சொல்லப்படவில்லை. ஏசாயா தீர்க்கனின் கூற்றுப்படி பார்த்தால், பாவம், மனிதனையும் தேவனையும் பிரித்துவிடும். ஏனெனில்,"***உங்கள் பாவங்கள், உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் முன்பாக பிரிவினை உண்டாக்குகிறது***" என்கிறார்.(ஏசா.59:2).ஆனால், இந்த ஏனோக்கு, 300 ஆண்டுகள் வாழ்ந்து, எந்தவொரு காரியமும் தனக்கும், தேவனுக்கும் பிரிவினை உண்டாக்காமல் வாழ்ந்தவனாகவும், அப்படியே ஏதாவது நேர்ந்தாலும், அவைகளிலிருந்து தன்னை உடனடியாக விலக்கி தேவனுடனான தனது உறவை சீர் செய்து வாழ்பவனாகவும் இருந்துள்ளான். நாமெல்லாம் பின்பற்றுவதற்கு எவ்வளவு அருமையான முன்னுதாரணம் பாருங்கள்!

நம்முடைய ஆன்மீக வாழ்வில், நாம் எப்படிப்பட்ட ஒரு ஜீவியத்தை நடத்திக்கொண்டுள்ளோம்? தேவன் நம்மோடு வாழும் அளவில், நமது ஜீவியம் உள்ளதா? சிந்தித்துப்பார்ப்போம். கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் ஒவ்வொரும் முன்மாதிரியான வாழ்க்கை வாழவேண்டுமென்று தானே, நமதாண்டாவராகிய இயேசுகிறிஸ்து மலைப்பிரசங்கத்தில், "***நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்***" என்றும், "***நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்***" என்றும், "***உங்கள் வெளிச்சம் மனுஷர் முன்பாக பிரகாசிக்கக்கடவது***" என்றும் (மத்.5:14-16) போதித்தார்.

ஆகவே, தேவனை நம்பி, அவருடைய வசனங்களுக்குத் தங்களைக் கீழ்ப்படுத்தி, கிறிஸ்துவுக்குள்ளாக வாழும் ஒவ்வொருவரும், வாழ விரும்பும் ஒவ்வொருவரும் ஏனோக்கின் வாழ்க்கை போலவும், இயேசுவின் மலைப்பிரசங்கத்தின்படியான ஜீவியம் போலவும், முன்மாதிரியுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். நம்முடைய வாழ்க்கை பற்றி, நமக்குப் பின்வரும் சந்ததியினர் பேசும்போது, ஏனோக்கு பேசப்படுவது போன்று, பேசப்படுவதற்கேதுவான நீதியுள்ள வாழ்க்கை வாழ்வோமாக!

## II.ஏனோக்கு தேவனோடிருக்கும் சிலாக்கியம் பெற்றான்

இரண்டாவதாக, ஏனோக்கிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம், தன்னுடைய நீதியான வாழ்க்கைக்குப் பரிசாக அவன் என்ன பெற்றுக் கொண்டான் என்பது.

ஆதியாகமம் 5:24 இவ்விதம் கூறுகிறது. "***ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்து கொண்டிருக்கையில் காணப்படாமற் போனான். தேவன் அவனை எடுத்துக்கொண்டார்***". தேவனால், எடுத்துக்கொள்ளப்பட்ட இன்னொரு மனிதனாகிய, எலியாவைக் குறித்து வேதம் இவ்விதம் சொல்லுகிறது. "*அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில், இதோ, அக்கினி ரதமும்,*

***அக்கினி குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து, இருவரையும் பிரித்தது. எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்***" (2ராஜா.2:11). இங்கே, பரலோகம் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருந்தாலும், அது, தேவன் வாசம் செய்யக்கூடிய பரலோகமாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், புதிய ஏற்பாடு "***பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனஷகுமாரனேயல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை***" என்று திட்டமும் தெளிவுமாகச் சொல்கிறது. (யோவா.3:13).

ஆகவே, ஏனோக்கு, தன்னுடைய நீதியான வாழ்க்கைக்குப் பலனாக நீதிமான்களின் இருப்பிடமான பரதீசிலிருக்கும் ஆசீர்வாதத்தைத் தான் பெற்றிருக்கமுடியும். ஆபிரகாம் போன்ற முற்பிதாக்களும், மோசேயைப் போன்ற நீதிமான்களும் இப்பொழுது பரதீசில் தான் இருக்கிறார்கள் என்றாலும், அவர்களெல்லாரைக்காட்டிலும், ஒரு வகையில், ஏனோக்கு விசேஷமானவனே. எப்படியெனில், இவர்களெல்லாரும் மரணத்தை ருசி பார்த்தவர்கள். ஆனால், ஏனோக்கு, மரணத்தை ருசிபாராமல் நேரிடையாக எடுத்துக்கொள்ளப்பட்டு பரதீசிக்குள் பிரவேசிக்கும் பாக்கியம் பெற்றுள்ளான். ஏனோக்கின் நீதியான வாழ்க்கைக்கான வெகுமதியைப் பாருங்கள்.

ஒரு வேளை ஏனோக்கு போல, நம்முடைய வாழ்க்கையில் நாம் எடுத்துக்கொள்ளப்படப் போவதில்லை. கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் யாருக்கும் அந்த வாய்ப்பில்லை. ஆனால், வேறொரு காரியம் நிச்சயமாகவே நம்முடைய வாழ்க்கையில் நடக்கும். அது குறித்து எபிரேயர் ஆசிரியர், "***அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.***" என்று கூறுகிறார் (எபி.9:27). ஆகவே, நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், ஒரு நாளில் மரணத்ததை சந்தித்து, அவருடைய நியாயாசனத்திற்கு முன்பாகப் போய் நின்றே தீர வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும், நீதியாக வாழ்ந்தால், அந்நாளில், நியாயாதிபதியாகிய இயேசு நம்மைப் பார்த்து, பரலோகத்தில் நீயும் பிரவேசி என்று சொல்லப்படுவதற்கான வாய்ப்பு இல்லாமலில்லை. தாலந்து உவமையில், தன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டதை சிரத்தையுடன் நிறைவேற்றிய மனிதனைப் பார்த்து இவ்விதம் சொல்லப்பட்டதாக இயேசு சொல்லியுள்ளார். "***அவனுடைய எஜமான் அவனை நோக்கி: உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் ; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்***" (மத்.25:27).

ஆகவே, நம்முடைய விசுவாசத்திற்குப் பலன் உண்டு என்பதை விசுவாசித்து, ஏனோக்கு போன்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்தால் என்றென்றும் தேவனோடிருக்கும் ஆசீர்வாதம் பெறுவோம்.

## III. ஏனோக்கு போல் நாமும் வாழ வேண்டும்

மூன்றாவது, நாம் கற்றுக்கொள்ளவேண்டியது, ஏனோக்கு போல் நாமும் வாழ வேண்டுமென்பதுதான்.

ஏனோக்குடைய வாழ்க்கையை கவனித்துப் பார்த்தால், அவன் தேவன் இருக்கிறார் என்பதை முழுமையாக உணர்ந்து,அவருடைய பிரசன்னத்தை தனது வாழ்வில் ஒவ்வொரு நாளும் அங்கீகரித்தவனாக வாழ்ந்துள்ளான். அதாவது ஒவ்வொரு நிமிடமும், தேவன் தன்னை கவனித்துக் கொண்டிருக்கிறார் என்று நம்பி, அவருக்கு ஒப்புக்கொடுத்தவனாக, அவருடைய வார்த்தைக்குப் பயந்து, ஜீவித்துள்ளான். .... ***தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்....*** (பிர.12:13) என்ற ஞானியின் வார்த்தைகள், அது வெளிப்படுத்தப்படுவதற்கு முன்னமே ஏனோக்கிற்கு தெரிந்திருந் திருக்கிறது.

அப்படியானால், நம்முடைய நாட்களில் நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும்? ஏனோக்கைப் போல நாம் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த வாழ்க்கை வாழ வேண்டுமானால், கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக்கொள்வது அவசியம்.(பிலி.2:5). ஏனெனில் கிறிஸ்து தன்னை எல்லாச் சந்தர்ப்பத்திலும், மரணத்தின் வாயிலிலும், பிதாவின் சித்தத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்தார்.

அடுத்து, ஏனோக்கு, தேவனால், தான் எடுத்துக்கொள்ளப்படும் வரைக்கும்,தன்னுடைய பக்திவைராக்கியத்தில் உண்மையும் உறுதியுமுள்ளவனாகவே இருந்துள்ளான். நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் தன்மையும், அதுபோலவே, உறுதியுள்ளதாக இருக்கவேண்டும். அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்கு சொல்லும்போது அதைத்தான் எழுதுகிறார்:"***ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக***" (1கொரி.15:58) இன்னும் வெளி.2:10-ல் ஆவியானவர் யோவானைக் கொண்டு,"***...நீ மரணபரியந்தம் உண்மையாயிரு,அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்***" என்று கூறுகிறார்.

நாம் நமது பக்தியில் உறுதியாயிருப்போமானால், ஏனோக்குடைய வாழ்வுக்கு தேவன் பலன் கொடுத்தது போல, நம்முடைய கீழ்ப்படிதலுள்ள கிறிஸ்தவ ஜீவியத்திற்கும்தேவன் பலன் கொடுப்பார்ஞானி சாலமோன்

சொல்லுவதுபோல்,"*உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான்.....*" (நீதி.28:18)அவரோடு கூட மற்றும், "*வெண் வஸ்திரந்தரித்தவர்களாய் நடக்கும் ஆசீர்வாதமும்*" கிடைக்கும்.(வெளி.3:4)

ஆகையால், கர்த்தருக்குள் அருமையானவர்களே, நாம் ஒவ்வொருவரும் பரலோகத்திற்குள், ஆம் அந்த நித்திய பாக்கியத்திற்குள் பிரவேசிப்பதற்கான காரியங்களை நம்முடைய வாழ்க்கையில் செய்வோமாக! ஏனோக்கும், நம்மைச் சுற்றிலுமிருக்கிற உலகத்தைப் போன்றதொரு பொல்லாத உலகத்திலே தான் வாழ்ந்தான்.(யூதா.14,15) ஆனாலும், அவன், தன்னை கறைபடாதபடி காத்துக்கொண்டான். அவன் வாழ்ந்த அக்காலகட்டத்தில், எந்தவொரு தேவச் சட்டமும், எழுதிக் கொடுக்கப்பட வில்லை. தேவனுக்குப் பிரியமாய் வாழ்வதற்கு எதைச் செய்யவேண்டும், எதைச்செய்யக் கூடாதென்ற பிரமாணங்கள் அவனுக்கு முன்பாக இல்லை. ஆனாலும், அவன்,நீதியாய் இப்பூமியில், தேவனோடு வாழ்ந்து, இப்பொழுது நித்தியவாழ்வு வாழ்ந்து கொண்டுள்ளான்.

ஆனால், கிறிஸ்துவுக்குப் பின் வாழும் நமக்கோ, தேவச் சட்டம் முழுமையான அளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.அவைகள் எல்லாவற்றுக்கும் போதுமானதாக உள்ளது(2தீமோ.3:16,17)எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது, என்ன பேசவேண்டும், எதைப்பேசக் கூடாது, எங்கே போகலாம், எங்கே போகக் கூடாது என்பன போன்றவைகள் மிகவும் தெளிவாக தேவனால் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அதுமாத்திரமல்ல, இயேசு இந்த உலகத்திற்கு வந்த நோக்கம் பற்றியும்(1தீமோ.1:15), பாவமன்னிப்பு பற்றியும்(அப்.22:16), சபை பற்றியும்(மத்.16:18), அதிலிருக்க வேண்டிய அவசியம் பற்றியும்(அப்.2:47), அதில் பிரவேசிப்பதற்கு என்ன செய்யவேண்டுமென்பது பற்றியும் (மாற்கு16:16,அப்.2:38), இன்னும் அவருடைய வருகை (அப்.1:11,வெளி.1:7), நியாயத்தீர்ப்பு(2கொரி.5:10) இப்படி எல்லாமே மிகத்தெளிவாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், ஆவிக்குரிய வாழ்வில் நாம் எந்த ஒரு காரியத்திற்கும் தடுமாற வேண்டிய அவசியமில்லை. அப்படியானால், நாம் எவ்வளவு தூரம் தேவனுக்கு உண்மையாக இருக்கவேண்டுமென எண்ணிப் பாருங்கள். "*....எவனிடத்தில் அதிகங்கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங்கேட்கப்படும்....*" என்று சொல்லப்பட்டிருக்கிறது(லூக்.12:48). ஆகையால் ஜாக்கிரதையாய் நம்முடைய வாழ்க்கையை மேற்கொள்வோமாக!

✝

S. ராஜநாயகம்

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!


# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

# திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

இடம் : **YMCA வளாகம், ஏலகிரி மலை** (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து, **சுமார் 25 கி.மீ)**
திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து **சுமார் 30 கி.மீ)**

**நாள் : மே மாதம் 1,2,3 - 2000 (திங்கள் - புதன்)**




**உணவும், தங்குமிடமும் இலவசம்**
**பதிவுக் கட்டணம் ரூ.75.00 மட்டுமே**

தொடர்பு முகவரி : **கிறிஸ்துவின் சபை**

*195, தாராபுரம் ரோடு, **காங்கயம்** - 638 701*

**✆ : 04257 - 20030**

*குறிப்பு : சுமார் 200 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.*

# கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதெப்படி?

நீங்கள் இருக்குமிடத்தில் கர்த்தருடைய சபையைத் தோற்றுவிப்பது எப்படி என்ற தலைப்பின் கீழான இத்தொடர்பாடத்தில், கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது எப்படி என்பது குறித்து இப்பொழுது விவாதிக்க உள்ளோம். நாம் சபையின் அங்கத்தினர்களாக இருந்தால், அதில் வெற்றியுள்ளவர்களாக இருப்பதற்கு, நாம் மற்றவர்களோடு சேர்ந்து, கிறிஸ்தவ வாழ்க்கை வாழவேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கை வாழாத பட்சத்தில் ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவனாக வாழ விரும்பாத பட்சத்தில், நாம் ஒரு கிறிஸ்தவனாக மாற வேண்டிய அவசியமேயில்லை. இது குறித்த விவாதத்தில் என்னோடு சேர்ந்து நீங்களும் சிந்தியுங்கள்.

ஒருவன் கிறிஸ்தவனாக மாற வேண்டுமானால், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதில் தனக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிடவேண்டும். அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில், எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றம் குறித்து நாம் வாசிக்கிறோம்.அவன் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று, தான் விசுவாசிக்கிறேன் என்று சொன்னான். ரோமர்.10:10-ல் அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கைபண்ணப்படும் என்கிறான். ஆனால், ஒருவன் தான் இரட்சிக்கப் படுவதற்கு, கிறிஸ்துவில் தனக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதோடு நிறுத்திக்கொள்ளாமல், அந்த இரட்சிப்பில் உறுதியாக நிலைத்திருப்பதற்கு, தன்னுடைய ஜீவிய காலமுழுவதும், கிறிஸ்துவின் நாமத்தைத் தொடர்ந்து அறிக்கை பண்ணவேண்டும். அதாவது, கிறிஸ்துவை தனது வாயினால் மாத்திரம் அறிக்கையிடுவதற்கு அவன் ஆயத்தமாயிராமல், அனுதின ஜீவியத்தின் மூலம் கிறிஸ்துவை அன்றாடம் அறிக்கை செய்யவேண்டும்.

ஒருவன் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதன் பலனாக, அவன் இரட்சிக்கப்பட்டு, அவருடைய சபையாகிய குடும்பத்தில் சேர்க்கப்படுகிறான். இப்பொழுது அவன், மீண்டும் பிறந்த ஒரு மனிதன் (யோவான்.3:3-5).அதன்படி, அவன் கிறிஸ்துவுக்குள் ஒரு புதுசிருஷ்டி. *"இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின,எல்லாம் புதிதாயின"* (2.கொரி.5:17). என்று பவுல் கூறுகிறார்.

ஆனால் கிறிஸ்துவுக்குள் இருப்பது என்றால் என்னவென்றும், அவருக்குச் சொந்தம் என்றால் என்னவென்றும் தெரிந்து கொள்ள நாம் மேலும் தொடருவோம். பவுல் கொலோசே பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு இவ்விதம் எழுதுகிறார்.

" நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். ஆகையால், விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். இவைகளின்பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும். நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்து கொண்டுவந்தீர்கள். இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேனமுள்ளவனென்றும், விருத்த சேதனமில்லாதவனென்றுமில்லை. புறஜாதியானென்றும், புறதேசத்தா னென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார். ஆகையால்,நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும்,நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத்தரித்துக்கொள்ளுங்கள்.தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளனாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக் கொண்டு,உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்." .(*கொலே.3:1-17*).

மேலும், அப்போஸ்தலன் பவுலுடைய வார்த்தைகளைத் தொடர்ந்து நாம் படித்து, கிறிஸ்தவ வாழ்க்கை பற்றி தெரிந்துகொள்வோம். இங்கே அவர், அந்நாட்களில் இருந்த கிறிஸ்தவர்கள் பற்றி பேசுகிறார். அவர்கள் சபையானது ஆரம்பமானதற்கும், அது வளர்ந்து பூரணத்தை அடைவதற்கும், எப்படி அற்புத வல்லமையின் உதவியை சார்ந்திருந்தார்களென்றும் கூறுகிறார். "மேலும் நாம்

அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கப்பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக்குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு,தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயமும்தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது. ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது. என்னவெனில்,மற்றப்புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து உணர்வில்லாதவர்களாய், சகல வித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களை காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். நீங்களோ இவ்விதமாய்க்கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தினநடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால் பொய்யைக்களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபம் கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள்எரிச்சல் தணியக்கடவது பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். திருடுகிறவன் இனி திருடாமல், குறைச்சலுள்ளவனுக்கு கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன். கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம். பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தையுண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப்பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்த துர்க்குணமும்

உங்களைவிட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்". *(எபே.4:11-31).*

புதிய ஏற்பாட்டுப் பகுதி அனைத்தையும் குறிப்பிடுவது என் நோக்கமல்ல. ஆனால், இந்த வசனங்கள் எல்லாவற்றிலும், ஒரு கிறிஸ்தவன் எப்படிப்பட்டவன், எப்படியிருக்கவேண்டும் என்பவைகள் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பரிசுத்தமான தேவபக்திக்குண்டான வாழ்க்கையாகும். இது தேவனுக்கும், சக மனிதனுக்கும் சேவை செய்வதாகும்.

கர்த்தருக்கு நமது கீழ்ப்படிதலைக் காட்டுவதன்மூலம், கிறிஸ்துவின் நாமத்தை நாம் பெற்றுக்கொள்கிறோம். *(அப்.11:26;1.பேதுரு 4:14).* அப்படிச்செய்வதின்மூலம், அவரைக்கனப்படுத்தி, அவர்தான் நமது கர்த்தரும், இரட்சகருமென்று அறிக்கையிடுகிறோம். நாம் அவரில் வாழ்கிறோம் என்றும், அவர் நமக்குள் வாழ்கிறார் என்றும் சொல்லுகிறோம்.ஆகவே, நாம் அவருடைய நாமத்தை எடுத்துக்கொள்வதோடல்லாமல், நம்முடைய பேச்சிலும், செய்கையிலும் ஒவ்வொரு நாளும் அவரை அறிக்கையிடவேண்டும். கிறிஸ்தவனாக இருப்பதற்கான சிறந்த வழிமுறை அதுதான்.

இப்பொழுது, நாம் புதிதாக தொடங்கப்பட்ட ஒரு பிராந்திய சபையின் அங்கத்தினர்களாக இருந்தாலும், நீண்ட நாட்களாக ஒன்றின் அங்கமாயிருந்தாலும், சிறிய அல்லது பெரிய சபையின் அங்கத்தினர்களாக இருந்தாலும், நாம் யார் என்றும், நாம் எங்கே அங்கமாயிருக்கிறோமென்பது குறித்தும் கவனிக்கப்படத்தக்க வர்களாகவே யிருப்போம்.

சில நேரங்களில், நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதை விட்டுக் கொடுக்க வேண்டியதாயிருக்கவேண்டுமோவென்று, நம்மைநாமே நொந்து கொள்கிறவர்களாயிருப்போம். ஒரு கிறிஸ்தவனாயிருப்பது கடினமானது என்றுகூட எண்ணக்கூடும். நாம் எந்தவொரு நற்காரியத்தையும் விட்டு விடவேண்டுமென கர்த்தர் கேட்கவில்லை. நம்மை துன்பப்படுத்தி, நம்மை அழித்துப்போடக் கூடியவைகளிலிருந்து நம்மை விலக்கிக் கொள்ளும்படியாகவே கர்த்தர் கேட்கிறார். இது, நமது சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய இரண்டுவாழ்க்கைக்கும் பொருந்தும்.அத்தோடு, நம்மோடிருந்து, நமக்கு உதவிசெய்வேன் என்றகர்த்தரின் வாக்குத்தத்தமும் நமக்குண்டு. இன்றும் நமக்கு உதவிசெய்யும்படி, நமது பரமதகப்பனை ஜெபத்தின்மூலமாக நாம் அழைக்கலாம். மேலும் நமக்கு உதவி, நம்மை உற்சாகப்படுத்தும்படியாக, நம்முடைய சகோதரர்களை நாம் நோக்கிப்பார்க்கலாம். உண்மையாகவே ஒரு கிறிஸ்தவன் மற்றெல்லாரைக்காட்டிலும் ஆசிர்வதிக்கப்பட்டவன்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருந்து, நம்மை சுற்றியிருப்பவர்கள் கிறிஸ்துவை பின்பற்றுவது எவ்வளவு முக்கியமானதென்று உணரும்படி, நாம் நமது நடக்கையின்மூலம் காட்டுவோமாக!.

J.C.CHOATE — **J.C. சோட்**

# தேவன் ஏன் பெண்ணைப் படைத்தார்?



தேவன் ஏன் பெண்ணைப் படைத்தார்? எந்த நோக்கமும், காரணமும் இல்லாமல் தேவன் எதையாவது படைத்துள்ளாரா? இல்லை. நம்முடைய தேவன் மகத்தான சிருஷ்டிகர், சிறந்த நோக்கத்தோடு தான் ஒவ்வொரு சிருஷ்டிப்பையும் உண்டாக்கினார். ஆகையால், தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு சிறந்த நோக்கத்தோடு தான் பெண்ணும் உருவாக்கப்பட்டிருக்கிறாள். பெண்ணைப்படைத்ததின் நோக்கம்பற்றிநான் என்ன நினைக்கிறேன் என்பது பிரச்சினையல்ல அல்லது ஒரு மனிதன் இது பற்றி என்ன சொல்லுகிறான் என்பது ஒரு பிரச்சினையல்ல. நாம் நிறைவேற்ற வேண்டியது தேவனுடைய நோக்கத்தைத் தான்.

இந்த அதிசயிக்கத்தக்க உலகத்தை தேவன் சிருஷ்டித்தது பற்றி ஆதியாகமம் கூறுகிறது. இந்த மகத்தான படைப்பிலுள்ள செடி, பறவை, மிருகம், பூச்சி போன்ற ஒவ்வொன்றிற்கும் ஒரு நோக்கம் உண்டு. ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தும் படியாக மனிதனைப் படைத்தார்.(ஆதி.2:15)இது ஒரு விவசாய வேலை. ***"..பின்பு தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்றதுணையை அவனுக்கு உண்டாக்குவேன்"*** என்றார்.(ஆதி.2:18) பிறகு தேவன், இன்னுமொரு அற்புதத்தை நடப்பித்தார்.ஆதாமுக்குத் துணையாக பெண்ணைப் படைத்தார். அவர், பெண்ணை படைக்கும்வரை படைப்பும், மனிதனும் முழுமை யடையவில்லை.படைப்பில் பெண்ணை போன்று யாரும் இல்லை. பெண்ணைப் படைத்ததற்கான நோக்கத்தை வேறெந்த சிருஷ்டியும் நிறைவேற்ற முடியாது.

ஆதி.2:23,24 மனிதன் இவ்விதம் சொன்னதாக சொல்லுகிறது. ***"அப்பொழுது ஆதாம், இவள் என் எலும்பில் எலும்பும் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறார். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டப் படியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்.இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடு இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்."*** மனிதனின் பங்காக இருக்கும்படியாகவே பெண் படைக்கப்பட்டாள். சமுதாயத்திற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய குடும்பங்களை உருவாக்கும்படி தேவன் ஆணையும் பெண்ணையும் படைத்தார். குடும்பங்களை சுமுகமாக நடத்துவதற்கு நாம் ஒருவருக்கொருவர் உதவவேண்டும். ஆனால் குடும்பத்தில் ஆணின் பங்கும், பெண்ணின் பங்கும் வித்தியாசமானது.எப்படிதேவதுவத்தின் தங்களுடைய . வேலையை நிறைவேற்றும்படி இயேசு பூமிக்கு வந்தபோது, தேவன் தன் பங்கை செய்ய பரலோகத்திலே இருந்து கொண்டாரோ, அதுபோல குடும்பத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசமான வேலையுண்டு.

மிருகங்கள், தேவனால் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை இயல்பாகவே நிறைவேற்றுகின்றன. நாம் செய்யவேண்டிய பெரும்பாலான காரியங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும் (எபே.5:21-23, 1பேதுரு.3:1-9), போன்ற வசனங்கள் ஸ்திரீகள் புருஷருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென கூறுகிறது. கீழ்ப்படிவது என்றால், முழுமையாக ஒருவருக்கு கீழ்ப்படிந்து அடங்குவது பெண்களே, நீங்கள் பிலி.2:5-8 வசனப்பகுதியை வாசித்து , நீங்கள் இயேசுவைப் போல் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருக்கிறீர்களா எனத் தீர்மானியுங்கள். கீழப்படிவது என்பது, கீழேபோட்டு மிதிக்கப்பட ஒப்புக்கொடுப்பதல்ல. இயேசு, தமது அன்பான கீழ்ப்படிதலோடு, பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

நம்முடைய கணவன்மார்களின் தலைமைத்துவத்திற்கு நம்மைநாமே ஒப்புக்கொடுப்போம். ஆம், இயேசுகிறிஸ்து, சபையின் மீது அன்பு கூர்ந்தது போல தம் மனைவிகளின் மீது அன்புகூறும் பங்கை பல ஆண்கள் சரிவர செய்வதில்லை என்பது உண்மைதான். ஆனால், அது நம்முடைய பங்கை சரி செய்யாமல் தப்பித்துக் கொள்ளலாம் என்று அர்த்தமாகாது. இப்படிப்பட்ட புருஷர்களை ஆதாயப்படுத்துவதைக் குறித்து 1பேதுரு 3:2 இப்படிச்சொல்லுகிறது. ***"போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்."*** தீத்து.2:3-5 இப்படிக் கூறுகிறது. ***"தங்கள் புருஷரிடத்திலும் தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிகும்படி...."***. இவையெல்லாம் ஏன் செய்ய வேண்டும்? தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு கிறிஸ்தவர்களாயிருக்கிறபடியினால் ஏற்கனவே தேவனின் வசனம் ஒருபோதும் தூஷிக்கப்படக்கூடாது என விரும்புவதை ஒத்துக்கொண்டோம். ஆனால் நம்முடைய ஜீவியம் இதற்கேற்றதாய் இருக்கிறதா?

இல்லத்திற்கென்று, தேவனால் நமக்களிப்பட்ட மாதிரியின்படி நாம் ஜீவனம் செய்ய ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கும்படி புருஷர்களும், மனைவிகளும் சேர்ந்து கர்த்தரிடத்தில் மன்றாடுவோம்.


ஆண்களே, உங்கள் மனைவிகளை பெலவீனப்பாண்டங்கள் எனக்கருதி அன்பாகவும், ஆதரவாகவும் நடத்துவீர்களானால் உங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது எளிதாயிருக்கும்.

பெண்களே, சாராள் ஆபிரகாமிடம், நடந்ததுபோல், உங்கள் புருஷரிடம் அன்பும்,மரியாதையும், கீழ்ப்படிதலும் உள்ளவர்களாய் நடந்தால், உங்களிடம் நேசமாய் நடப்பதற்கு உதவியாயிருக்கும்.

சாத்தான் நமது ஜீவியத்தின் மேல் கொண்டுள்ள அதிகாரத்தை எதிர்த்துப் போரிட ஒருவருக்கொருவர் உதவிசெய்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் ஒருவரோடொருவர் சண்டையிட்டு, பிறர் மீது குற்றத்தை சுமத்தி தப்பிப்போமானால், சாத்தான் ஜெயித்துவிடுவான். உங்கள் குடும்பங்களில் அவன் அதிகாரம் செலுத்த அனுமதிக்காதிருங்கள்.

தமிழில்: ரேச்சல் இராஜநாயகம்.

வாலிபர் பகுதி




# திரும்பக் கிடைக்குமோ?

விசித்திர விநோதமாய் விஞ்ஞானிகள் வியக்கும்படி வையகத்து மண்ணால் விந்தை மனிதனை வனைந்தெடுக்கும்முன், தம் அநந்த ஞானத்தால், நமதறிவுக்கு அதிதூரமான நினைவுகளுடன் பரம குயவனாம் பரலோகத்தின் தேவன், அவனுக்குத்தேவையான சிறுதுரும்பையும் உருக்கொடுத்துப் படைத்தெடுக்கையில், மாந்தர்கள், மணித்துளிகளின் மேன்மையை உணரவேண்டும் என்ற உன்னத தொலைநோக்குடன், வானை நடைபாதை எனப் பாவித்து, மணவறைக்கு கெம்பீரமாய் கிளம்பும் மணவாளனான கதிரவனையும், விண்ணை நதியென க்கருதி மிதந்து வரும் மதியையும், விளை நிலமென எண்ணி விண்மீன்களை விதையாகத் தூவியும் படைத்தார்.

கடிகாரத்தின் நொடிமுள்ளும், பொங்குமாங் கடலின் பேரலையும் எந்நபருக்கும் காத்திருப்பதில்லை. காலம், தன்னை கவனிப்போர் இல்லை என்றாலும், பயன்படுத்துவோர் குறைவென்றாலும் பாரபட்சமில்லாமல் தன் அலுவலை நிறுத்தாது செய்யும் தன்மையுடையதாக விளங்குவதோடு நில்லாமல், தன்னை இழந்தோர்க்கு மறுவாய்ப்பை ஈவு இரக்கமின்றி மறுப்பதை தன் குணமாகவும் கொண்டதாக அமைகிறது. வாலிபப் பருவத்தில் இருக்கும் நீங்கள் பள்ளி அல்லது கல்லூரித் தேர்வுகளை முடித்து விடுமுறை நாட்களை நகர்த்திக் கொண்டிருப்பீர்களென நம்புகிறேன். சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்கிற கர்த்தருடைய வேதம், ***“நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள்.”*** (எபே.5:16) என்ற ஆலோசனையை நம்முன் வைக்கிறபடியால் இம்முறை அவைகளைக் குறித்து சிந்திக்க முனைப்புடன் முற்படுவோம்.

## I. ஏன் நாழிகையை நழுவவிடக் கூடாது?

மனிதனுக்கு தேவனால் வரையறுக்கப்பட்டு ஈவாகக் கொடுக்கப் பட்ட தன்னிகரில்லா தானமாய் காலம் விளங்குகிறது. ஸ்திரீயினிடத்தில் பிறந்தவனின் சஞ்சலமிகு வாழ்க்கையின் கால அளவு எழுபது வருடம் பெலத்தின் மிகுதியால் எண்பது வருடம் என்று 90வது சங்கீதத்திலே மோசே இயம்புகிறார். மேலும் மனிதனின் ஜீவியத்தை குறித்து வேதாகமம் இப்படியாய் விளம்புகிறது, நெய்கிறவன் எரிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடும் என்றும் (யோபு7:6). நிழலைப்போன்றதென்றும் (யோபு8:9) அஞ்சற்காரர் ஓட்டத்தைவிட தீவிரமானதென் றும் (யோபு9:25) புகையைப் போன்றதென்றும்(யாக்.4:14) கதையைப் போன்ற தென்றும்(சங்.90:9) அதன் சுருக்கத்தை வெகுவாய் விவரிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் வைகறை விடியலின்

வெளிச்சத்தைக் கண்டு காலையில் மலரும் புஷ்பத்தைப்போலும், ஆதவன் மறைவால் வாடிப்போகின்ற மலரைப்போலவும் குறுகினதாய் திகழ்கிறது. ஆனால் இதில் என்ன சஞ்சலமென்றால் குறிப்பிட்ட நேரத்தில் துவங்கிய நம் வாழ்க்கை, என்று தன் முடிவுரையை முழங்குமென்று தெரியாததுதான்.

20-ம் நூற்றாண்டில் அகிலத்தின் அறிவுத்திறனை நோக்குவோமானால் வான்முகில் முட்ட உயர்ந்து நிற்கும் சிகரத்தைப்போல் வளர்ந்து நிற்கிறது. இவ்வளர்ச்சிக்கு நாம் ஈடுகொடுக்க வேண்டுமென்றால் நாழிகையை வீணாக்காமல் பலன்தர அதை பயன்படுத்துதல் வேண்டும். கர்த்தரால் நம் கரத்தில் கொடுக்கப்பட்ட காலத்தினை நாம் பயன்படுத்தாது தண்ணீரெனக்கருதி சிந்தி விடுவோமானால், அதை மீண்டும் அள்ளிக்கொள்ள செந்நீர் சொறிந்து முயற்சிக்கவேண்டுமென்பதால், அதை இப்பொழுதே சீராய் செலவிடுதல் வேண்டும்.

வேதாகம பக்கங்களை நாம் புரட்டிப் பார்ப்போமானால், கர்த்தர் காலந்தாழ்த்துவதை அறவே வெறுக்கிறார் என்பதை புரிந்துகொள்ள இயலும். இயேசு தமது சீடர்களை இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பும்போது, அவர்களை அவ்வீட்டார் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் பாதங்களில் படிந்திருக்கும் தூசியை உதறிவிட்டு அடுத்த பட்டணங்களுக்குப் போங்களென்றுரைத்தார். (மத்.10:14) அவர் சொல்லுவதிலும் ஒரு நோக்கமுண்டு. சீஷர்கள், தங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களைப்பற்றி யோசிக்கலானால், சோர்ந்து அடுத்தப்பட்டணங்களில் கர்த்தரின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளும் ஆத்துமாக்களை சந்திக்காமல் போகவும், காலம் தாழ்த்துவதால் அவ்வாத்துமாக்களை இழந்துபோகவும் வாய்ப்புண்டு. ஆகவேதான், தோல்வியைக் குறித்து யோசித்து துவண்டுபோய் கவலையால் காலத்தை வீணாக்காமல் தொடர்ந்து செயல்பட எம்பெருமான் இயேசு வலியுறுத்துகிறார்.

வாலிபர்களாகிய நாம் சில வேளைகளில் தோல்வியைக் கண்டு சோர்ந்துபோகிறோம். காலம் கடந்துவிட்டதே என்று யோசித்து பல நேரங்களில் நாம் கண்ணீர் சிந்துகிறோம். வாலிபனே! காலத்தைப் பிரயோஜனப்படுத்தாமல் தோல்விகண்டாயோ? அடுத்துவரும் வாய்ப்பினை நீ பார்க்க முடியாதபடி, உன் விழிகளை கண்ணீரால் நிரப்பாதே. வெற்றியை இலக்காக வைத்து அதை அடையும் வரை இமைக்கு உறக்கம் கொடாதே. காலத்தை வீணாக்காமல் ஒரே தேவனைத்தேடு, வெற்றி காவியம் உருவாக்க அவர் துணை நாடு. அப்படிச் செய்கையில் கண்டிப்பாய் கர்த்தர் உன்னுடன் இருப்பார்.

## II. காலத்தை எப்படி பிரயோஜனப் படுத்துவது?

நமது வாழ்க்கையின் அளவைக் குறித்து அறிந்த நாம், அது மிகக் குறைவென்றதாலும், அது முடியும் நேரம் மறைக்கப்பட்டிருக்கிறது என்றதாலும், நாசியில் சுவாசம் நின்றுபோன நாழிகைக்குப் பின் மறுமையின் வாழ்க்கை இருக்கிறது என்பந்தை உணர்ந்து, அவ்வுலக வாழ்க்கையை இவ்வையகத்தின் வாழ்வை மையமாகக் கொண்டு அமைந்திருப்பது அறிந்து மீட்பைக் குறித்தான காரியத்தில் போர்கால நடவடிக்கையை மேற்கொள்ளல் அவசியம்.

இறைவனின் இன்றியமையாத வேதத்தில் நமது மீட்பைக்குறித்து பரிசுத்த ஆவியானவர் நவில்கையில் "*......இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்*" (2கொரி.6:2) என்று வரிசுத்தமாய் மொழிகிறார். ஆகவே, ஆத்மீக யாத்திரையில் நாம் வேதம் சொல்வதைக் கேட்பதில், காலம் தாழ்த்துவது இத் தரணியின் ஜீவியத்தோடு நில்லாமல் தனது பாதிப்பை நித்தியம் வரை நீடிப்பதால், ஆபத்து அதிகம் என்றுணர்ந்து இந்த இளம்பிராயத்தில் நமக்களிக்கப்பட்டிருக்கும் கிருபையின் காலத்தைப் பிரயோஜனப்படுத்துவோம்.

ஆதித்திருச்சபையின் சரித்திரத்தைத் தன் பக்கங்களில் எழில்மிகு வண்ணமாய் ஏந்திநிற்கும் அப்போஸ்தலர் செயல்பாட்டு நூலில் இரட்சிப்படைய வேண்டியதின் அவசியத்தையும், அவசரத்தையும் விளக்குமோர் உதாரணத்தை உற்றுநோக்குவோம். பிலிப்பு பட்டணத்தின் சிறைச்சாலைக்காரனின் வீட்டில், தேனிலும், தெளித்தேனிலும் மதுரமான கர்த்தருடைய வசனத்தை பவுலும், சீலாவும் போதித்தார்கள். அதைக்கேட்ட அவ்வீட்டார் இரட்சிக்கப்படுவதின் அவசரத்தை உணர்ந்து காரிருள் என்றும்கருதாமல் உடனே திருமுழுக்குப் பெற்றார்கள். (அப்.16:23-33)இரட்சிப்பின் சுவிசேஷத்தை இன்று கேள்விப்படுகிற நாமும் சிற்றின்பத்தின் மீதுள்ள மோகத்தால் இன்னும் கொஞ்சம் நாளாகட்டும் என்று பேலிக்ஸைப்போல் பிசாசுக்கு செவிகொடாமல் (அப்.24:3) கர்த்தருக்கே கீழ்ப்படிவோம்.

இந்த விடுமுறை நாட்களை வேதம் வாசிப்பதிலும், ஆவிக்குரிய நூல்களைப் படித்து தியானிப்பதிலும், விடுமுறை வேதாகமப் பள்ளிக்குச் செல்லுவதிலும், ஆன்மீக கூட்டங்களில் கலந்துகொள்ளுவதிலும் (8-ம்பக்கம் பார்க்க)அஞ்சல் வழியாய் வேதத்தை பயிலுவதிலும் (விலாசத்திற்கு பின் அட்டையைப் பார்க்கவும்) செலவிடுவோமானால் அது சாலச் சிறந்ததாக அமையும். நமக்கு உலகக் கல்வியும், அறிவும் மிக அவசியமானதால் அறிவுப்பசியுடையவர்களாய் நூலகம் சென்று தரமான நூல்கள் எதையரினும் கைகளில் ஏற்றிக்கொண்டு காரியங்களைக் கண்வழியாய் செலுத்தி கருத்தறையில் அமர்த்தல் நன்று.

நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு நாளும் உறங்கி ஓய்வெடுக்கப்போகுமுன் நம் அறிவுக் களஞ்சியத்தில் புதிதாக சத்துள்ள சிந்தனைகளும், கருத்துக்களும், விசயங்களும் சேர்ந்திருக்கிறதா என்றெண்ணி, சேராவிடில் சேர்த்து, பின்பு படுத்தால் அறிவு வளர்வது அதிநிச்சயம். இதையே ஆவிக்குரிய வாழ்விலும் பின்பற்றலாம். கர்த்தரைப்பற்றி இன்றென்ன நான் கற்றேன் என யோசித்து, வேதம் வாசித்து, அறிவைப்பெற யாசித்தால் யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிற ஜோதிகளின் பிதா நமக்கும் அளவில்லாமல் பரத்தின் ஞானத்தை பாரபட்சமின்றி தருவார் என்பதில் ஐயமில்லை. ஆகவே எனக்கன்பானவர்களே! காலத்தை வீணாய் கழிக்காமல் கர்த்தரிடத்தில் சேர்ந்து ஆசி பல பெறுவோமாக!

ஜே. பிக்கின்ஸ்



# வெளிப்படுத்தின விசேஷம்

**அதிகாரம்.2:18-29**

வெளிப்படுத்தல் இரண்டாம் அதிகாரத்தில் உள்ள நான்காவது நிருபம் தியத்தீரா சபைக்கு எழுதப்பட்டுள்ளது. தியத்தீரா சபைக்கு இயேசு தன்னை, அக்கினி ஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவக்குமாரன் என விவரிக்கிறார். வெளி.1:14,15, இயேசு, அக்கினி ஜுவாலை போன்ற பாதங்களை உடையவரும் என்று விவரிக்கப்பட்டுள்ளார். இந்த விவரிப்பு, மீண்டும் தியத்தீரா சபைக்கு எழுதும்போது திரும்ப சொல்லப்பட்டுள்ளது. கண்கள் அக்கினி ஜுவாலை போன்று என்பது மீண்டும் வெளி.19:12-ல் உள்ளது. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். (எபி.4:17) என்பதை இது நினைவுபடுத்துகிறதாக உள்ளது. ஆசியாவிலிருந்த சபைகளுக்கு எழுதப்பட்ட ஒவ்வொரு நிருபத்திலும், இயேசு உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் என்று கூறுகிறார். நாம் செய்கின்ற ஒவ்வொன்றையும் இயேசு காண்கிறார். தீமை செய்கிற எல்லோரையும் அக்கினியினாலே தண்டிப்பார். உலைக்களத்தில் காய்ந்த வெண்கலம் போன்ற பாதங்கள் என்பது, கிறிஸ்தவர்களைச் சுத்திகரிப்பவராக இயேசு இருப்பார் என்பதை நினைவுபடுத்துவதாக இருக்கலாம். மல்கியா.3:2,ழ3 வசனங்கள் "...... ***அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார். அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்.***" என்று இயேசுவைக்குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. தியத்தீராவிலிருந்த சபையானது, நிச்சயமாக சுத்திகரிக்கப்பட வேண்டிய அவசியத்திலிருந்தது, அதன் மூலம் தங்கள் பாவங்களிலிருந்து விலகி, நீதியின் பலியாக தங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கமுடியும். கிறிஸ்துவின் பாதங்கள் என்பது, அவருடைய விரோதிகளை, அவருடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்துவார் என்பதின் எச்சரிப்பாகவும், நினைவுபடுத்தலாகவும் உள்ளது.(1.கொரி.15:25; எபி.1:13;2:8 எபி.10:13). இந்த நிருபத்தின் கடைசிப் பகுதியில் தியத்தீரா சபையார்,மனந்திரும்பாத பட்சத்தில் என்ன நடக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

பல காரியங்களினிமித்தம், தியத்தீராவிலிருந்த சபையை இயேசு மெச்சுகிறார். உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும் நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின் செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன் என்று சொன்னார். அவர்களிடத்தில் அன்பும், விசுவாசமும் இருந்தது. சில காரியங்களில் கர்த்தருக்குச் சரியானபடி சேவை செய்தனர்.அவர்கள் சகிப்புத் தன்மையுடையவர்களாகவும், விசுவாசத்தைவிட்டு வெளியேறாதவர்களாகவும் இருந்தனர். இந்த நற்காரியங்கள் எல்லா கிறிஸ்துவின் சபைகளுக்கும் அவசியமாய் இருக்கிறது. ஆனாலும், கர்த்தருக்குக் கீழ்ப்படிவதற்கு நாம் செய்யவேண்டிய காரியங்களில் இது ஒரு பகுதியாகத்தான் அமைகிறது. தியத்தீரா சபைக்குச் சில பிரச்சனைகளும் இருந்தது. அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில், அது அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை இழப்பதற்குக் காரணமாயிருந்தது. பெர்கமு சபையாரைப் போலவே, கள்ளப் போதகமும், ஒழுக்கக் கேடானவைகளும் தியத்தீரா சபையின் மத்தியிலிருந்தது. வெளி.2:20-ல் இயேசு தியத்தீரா சபைக்கு, ***"ஆகிலும், உன்பேரில் எனக்கு குறைஉண்டு; என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்தீரியானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்"*** என்று சொன்னார் கர்த்தர். வேசித்தனத்தையும், விபச்சாரத்தையும் கடிந்து கொள்வது இங்கே எல்லோரும் காணும்படி தெளிவாக உள்ளது. வேசிமார்ககத்தாரும், விபச்சாரக்காரரும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதில்லை. *(1.கொரி.6:9-10)*. ஆனால் கர்த்தருடைய நீடிய பொறுமையையும் சகிப்புத்தன்மையும் இங்கும் காண்கிறோம். யேசபேல் மனந்திரும்பும்படியாக இயேசு தவணைக் கொடுத்தார். ஆனால் இதுவரைக்கும் அவள் மனந்திரும்பவில்லை. *(வெளி.2:21)*. நம்முடைய பாவங்களினிமித்தம் அவர் நம்மை உடனடியாக அழிக்காமல், நாம் மனந்திரும்பும்படி சந்தர்ப்பம் அளிப்பதற்கு அவர் கிருபையுள்ளவராயிருக்கிறார். நம்முடைய அக்கிரமங்களுக்குத்தக்க தண்டனையை அவர் நமக்கு அளிக்காமலும் ***" அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். "*** *(சங்.103:10)*.

ஆனால், நாம் தேவனுடைய அன்பு, இரக்கம், ஆகிய இவைகளை அங்கீகரித்து அவைகளுக்கு நன்றி சொல்லும்போது, அவர் அளவில்லாத தருணங்களை நாம் மனந்திரும்பும்படியாய்க் கொடுத்துக் கொண்டே இருப்பார் என்று நினைத்து, நம்மை நாமே வஞ்சித்துக் கொள்ளக்கூடாது.

தேவனுடைய பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. தியத்தீரா சபையார் அந்தக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தனர். கர்த்தர் தியத்தீரா சபைக்கு இதோ, அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் நான் அவளைக் கட்டில் கிடையாக்கி, அவளுடனே விபசாரஞ் செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால், அவர்களை மிகுந்த உபத்திரவத்திலே தள்ளுவேன் என்கிறார். அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன் என்றார். இது அவளைப் பின்பற்றுகிறவர்களுக்குரிய, தண்டனையான இரண்டாம் மரணத்தைக் குறிக்கிறதாக உள்ளது. (வெளி.20:14) நம்முடைய பாவங்களை தேவன் மன்னிக்கும்படியாய், நாம் மனந்திரும்பவேண்டுமென்பதற்கு இது இன்னுமொரு சிறந்த உதாரணமாக உள்ளது. தியத்தீரா சபைக்கான கண்டனத்தில் அடங்கியுள்ள பாடங்களில், இது முக்கியமானது. தவறு செய்கின்ற கிறிஸ்தவர்களுக்கு, எப்படிப்பட்டதான தண்டனை காத்திருக்கிறதென்று இயேசு நமக்கு சொல்லுகிறார். இதன் மூலம் நானே உள்ளிந்திரியங்களையும், இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்து கொள்ளும்; அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன். இச்செய்தி எல்லாச் சபைகளுக்கும் என்பதை கவனியுங்கள். இக் குறிப்பிட்ட எச்சரிப்பானது, கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களுக்கானது. இயேசு நமது, உள்ளிந்திரியங்களை ஆராய்ந்து பார்த்து நாம் யார் என்பதை சரியாகக் காண்கிறார். ஒரு நாளில் இயேசு நம்மை நியாயந்தீர்ப்பார். நாம் ஒரு காலத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தோமென்பதற்காக நம்மை அப்பொழுது மன்னிக்கமாட்டார். நம்முடைய கிரியைகளின்படியாக நம்மை நியாயந்தீர்ப்பார். கிறிஸ்தவர்களாகிய நாம் நமக்குள்ளாகவே திருப்திப்பட்டுகொள்ளமுடியாது. நாம் மனந்திரும்பாமல், பாவம் செய்வோமானால், நம்முடைய ஆத்துமாக்களை இழந்து போவோம். இந்த உண்மையானது, இந்நிருபத்தின் இறுதியில், ஜெயங்கொண்டு, முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவன் எவனோ என்று வாக்கின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.(வெளி.2:26)

தியத்தீரா சபைக்கான இயேசுவின் கண்டனத்தில் அடங்கியுள்ள, முக்கியமானதொரு பாடத்தை நாம் விட்டுவிடக்கூடாது. இவர்களை இயேசு முதலாவது கடிந்து கொண்டது, பொல்லாதவைகளை நடப்பிக்கும்படியாய் கள்ள உபதேசங்களைப் போதிப்பதற்கு கள்ளப் போதகர்களுக்கு இடங்கொடுத்த பழைய ஏற்பாட்டின் காலத்தில்ஆகாப் ராஜாவின் மனைவியாகிய யேசபேல் தேசத்தை விக்கிரகவணக்கத்திற்கு திருப்பினாள். தியத்தீரா சபையில் யேசபேல் என்ற பெயரில் உண்மையாகவே இருந்தார்களா அல்லது அந்த சபையில் என்ன நடந்தது என்பது இந்தப் பெயரைக் கொண்டு உருவமாகச் சொல்லப்பட்டிருக்கிறதா என நாம் திட்டமாகச் சொல்லமுடியாது. ஆனால்,

எப்படியிருப்பினும், சந்தேகத்திற்கிடமின்றி தியத்தீரா சபையில் வேசித்தனமும், விக்கிரகாராதனையும் இருந்தது. வெளி.2:20, இயேசு யாரைக் குறிப்பிடுகிறாரோ அவர்கள், நாங்கள் கள்ள உபதேசத்தில் நடக்கிறவர்களல்ல அல்லது ஒழுக்கக் கேடானவைகளைச் செய்கிறவர்கள் அல்ல என்று ஒருவேளை வாதிடலாம். ஆனால் இயேசு அவைகளை சபையிலே நடப்பதற்கு அனுமதித்ததைக் குற்றமாகச் சொல்லுகிறார். அவைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. ஆகவே, தேவனுடைய பார்வையில் அவர்கள் குற்றவாளிகளே. இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்களும், மூப்பர்களும் சபையில் அப்படிப்பட்டவர்களாகவே உள்ளனர். உண்மையாகவே சிலர் தீய காரியங்களில் பங்கு பெறுவதில்லை, ஆனால் அவைகளை எதிர்க்காமல் மௌனமாக ஒதுங்கிக் கொள்ளுகிறார்கள். இயேசுவானவர் அப்படி இருக்கவில்லை. பரிசேயர், சதுசேயர் என்பவர்களுடைய தவறான உபதேசங்களையும், செயல்களையும் தைரியமாய் வெளிப்படுத்தி, தயவு தாட்சண்யமின்றி கண்டித்தார். இயேசு, தேவாலயம் கள்ளர் குகையாக்கப்படுவதை அனுமதிக்காமல், உடனடியாக அவர்களை வெளியேற்றினார். (மாற்கு11:15-17) அதுபோலவே, அப்போஸ்தலனாகிய பவுல், கள்ள சகோதரர்களாலே, தவறான காரியங்கள் சபைக்குள்ளாக கொண்டு வரப்படுவதை ஒரு நாழிகை கூட சகிக்கமாட்டார்.(கலா.2:3-5) அப்போஸ்தலன் பவுல் எபேசுவிலிருந்த போது, ஆட்டுத்தோலைப்போர்த்திய ஓநாய்களாகிய கள்ள போதகர்களை தைரியமாகவும், உறுதியாகவும் எதிர்த்தார். அவர் போனபின்பு அவர்கள் சபையிலே நுழைந்து விடக்கூடாதென்பதில் கவனமாக இருந்தார். (அப்.20:29-31) இயேசுக் கிறிஸ்து போலவும், அப்போஸ்தலன் பவுல் போலவும் நாம் விசுவாசமும் , தைரியமும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். தியத்தீரா சபையாரைப் போல நாம் சத்தியத்திநிமித்தம் வெட்கப்படுகிறவர்களாகவும் பயந்தாக் கொள்ளிகளாகவும் இருக்கக்கூடாது.(லூக்.9:26)

தியத்தீரா சபையில் தீமைசெய்கிறவர்களைக் கண்டித்தபின், கர்த்தர் அச்சபையில் இவர்களைப் போலல்லாமல் இருந்த சிலரை மெச்சவும் செய்தார். இந்தச் சிலர் கள்ள உபதேசத்தைப் பொறுத்தளவில், அவைகளை ஆர்வத்தோடு போதித்துப் பின்பற்றவோ அல்லது அவைகள் போதிக்கப்படும்போது, ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்து அவைகளை அனுமதிக்கவோயில்லை.இந்தச் சிலர், தங்களின் மற்ற சகோதரர்கள் போல் சாத்தானின் ஆழங்களை அறியவில்லை. அவர்களிடம் என்ன இருந்ததோ அதை உறுதியாகப் பற்றிக்கொள்ளும்படி


இயேசு அவைகளை ஊக்கப்படுத்தினார். அவர்கள் மீது எந்தவொரு பாரத்தையும் ஏற்றவில்லை. கர்த்தரின் சித்தத்தை நாம் இன்று எந்தளவு செய்கிறவர்களாயிருந்தாலும், அவர் சித்தம் நிறைவேற்றுவதை நாம் ஒருபோதும் விட்டுவிடக்கூடாது. தீயத்தீரா சபையில் உண்மையுள்ள சில அங்கத்தினர்கள் இருந்தார்கள். அவர்கள் பெரும்பான்மையானவர்களின் பாவத்தை எதிர்த்து அவைகளில் பங்கு கொள்ளவில்லை. தேவன், பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை. நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும். துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல் தான் இருக்கும். (எசே.18:20) என்று சொல்லியுள்ளார். ஆகையால் இயேசு நீதிமான்களை, குற்றவாளிகளுடன் சேர்ந்து தண்டிக்கமாட்டார். துன்மார்க்கனை நீதிமானாக்கு கிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் (நீதி.17:15) நீதிமானைத் தண்டிக்கிற அருவருப்பான செயலை தேவன் ஒருபோதும் செய்து குற்றவாளியாகமாட்டார். ஆனால் இதற்கு துன்மார்க்கத்திற்கு ஒப்புக்கொடுத்த ஒரு சபையிலே நாம் தொடர்ந்து, அளவில்லாத காலத்திற்கு அங்கமாக இருக்கலாம் என்பது பொருள் அல்ல. சபையானது மனந்திரும்ப மறுக்குமானால், நாம் அந்தச் சபையை விட்டு வெளியேறவேண்டும். இது குறித்து நாம் சர்தை சபைக்கு எழுதப்பட்ட நிருபத்தில் விளக்கமாக படிக்க முடியும்.

தியத்தீரா சபைக்கு எழுதப்பட்ட நிருபம், ஓர் அருமையான வாக்குத்தத்தத்தோடு முடிகிறது. ஜெயங்கொண்டு முடிவுபரியந்தமும் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான். அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன். (வெளி.2:21-23). இயேசு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தையும் பிதாவினிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார். (மத். 28:18) இந்த அதிகாரத்தின் மூலம் இயேசு எல்லாவற்றின் மேலும் ஆண்டவராயிருக்கிறார். (அப்.2:36;10:36) தேசங்களை இருப்புக் கோலால் ஆளுகை செய்கிறார். இந்த வல்லமையானது. அவர் உயிர்த்தெழுந்த நாளிலே பெற்றுக்கொண்ட சுதந்திரமாயிருக்கிறது. (சங்.2:7-9;அப்:13:33). இந்த உலகம் இருக்கும்வரை தம்முடைய ஊழியக்காரரைக் கொண்டும் பட்டயத்தை விருதாவாய்ப் பிடித்திராதவர்களும் தீமை செய்கிறவர்கள் மேல் ஆக்கினையை வரப்பண்ணுகிறவர்களுமான அரசாங்க அதிகாரிகளைக் கொண்டும் தேசங்களை ஆளுகிறார். (ரோமர்.13:1-7)


ஒவ்வொரு தேசத்திற்கும் சட்டங்களும், அவைகளை நடைமுறைப்படுத்துகிறவர்களும் இருக்கிறார்கள். இந்த வகையில் என்ன நடக்கிறதென்று ஜனங்களும் அதிகாரிகளும் அறியாததிருந்தாலும் உலகமனைத்தும் தேவனுக்குக் கீழ்ப்படுத்தப்படுகிறது. இயேசுவின் ராஜ்யத்தின் சட்டமாகிய புதிய ஏற்பாட்டைப் பின்பற்றுவதன் மூலம் இயேசுவே கிறிஸ்து என்று அவருக்கு கீழ்ப்படுத்துவது விருப்பத்தோடு செய்வதாய் இருக்கவேண்டும். ஆனால், ஒரு நாட்டினுடைய சட்டத்தைப் பின்பற்றுவதன் மூலம் இயேசுவுக்கு கீழ்ப்படிவது இருப்பு கோலாலும், பட்டயத்தாலும் அமலாக்கப்படுகிறது. இயேசு, இருப்புக்கோலால் உலகத்தை ஆளுகை செய்யக்கூடிய வாக்குத்தத்தத்தை ஜெயங்கொள்ளுகிற கிறிஸ்தவனுக்கு கொடுத்திருக்கிறார். இதன் பொருள், இயேசு எல்லாவற்றின் மேலும் ஆண்டவராயிருப்பதால், இப்பொழுது பரதீசிலிருப்பவர்களை தன் வேலைக்கு, ஏதாவதொரு வகையில் உபயோகப் படுத்துகிறார் என்பதா அல்லது இந்த வாக்குத்தத்தம், அவருக்கு உண்மை யுள்ளவர்கள் பரலோகத்தில் என்றென்றைக்கும் அவருக்குச் சேவை செய்து, அவருடன் ஆளுகை செய்யும் வேலையைக் குறிப்பிடுகிறதா? *(வெளி.22:3-5)*.இவைகள் சுவாரஸ்யமான கேள்விகளே, ஆனால் கர்த்தர் இதற்கான விளக்கத்தை வெளிப்படுத்தவில்லை.

அதுபோலவே, விடிவெள்ளி நட்சத்திரத்தைக் குறித்து வாக்குத்தத்தமும் இரகசியமாகவே உள்ளது. இயேசு தம்மை பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாயிருக்கிறேன் என்றார். *(22:16)* ஆனால், விடிவெள்ளி நட்சத்திரத்தை நமக்குக் கொடுப்பேன் என்று சொல்லும்போது, அவர் எதை அர்த்தம் செய்கிறார்? கிறிஸ்துவை நாம் ஏற்கனவே கொண்டுள்ளோம். ஆகையால் ஒருவேளை, இது, நீதிமான்கள், உயிர்த்தெழுந்தபின் நட்சத்திரங்களைப் போல என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள் *(தானி.12:3)* என்ற விவரிப்போடு தொடர்புடையதாய் இருக்கக்கூடும். நட்சத்திரங்கள் அதன் மகிமைக்குப் பெயர் பெற்றவை.*(1.கொரி.15:41)* பரலோகத்தில் நாம் பெற்றுக்கொள்ளும் மகிமை நித்தியமானது.*(2தீமோ.2:10;1பேதுரு.5:10)*. இந்த வாக்குத்தத்தங்களின் பொருளை நாம் சரியாக விளங்கிக்கொள்ளாவிட்டாலும், சந்தேகத்திற்கிடமின்றி அவைகள் மகத்தான வாக்குத்தத்தங்களாகவும், நித்திய பலனுக்குண்டான பங்காகவும் உள்ளது. ஆகவே அவைகள் என்னவாக இருந்தாலும், அந்த வாக்குத்தத்தங்களில் நாம் நிச்சயம் பங்குபெறவேண்டும். ஆனால் அப்படிச் செய்வதற்கு நாம் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருந்து முடிவுபரியந்தமும் கிறிஸ்துவின் கிரியைகளைக் கைக்கொள்ளவேண்டும். நாம் கடைசிவரை பாவம் செய்கிறவர்களாயிருந்தால், இந்த ஆசீர்வாதங்களை நாம் ஒருபோதும் பெற்று அனுபவிக்க முடியாது. ***"ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்க்கடவன்."*** (வெளி.2:29)

**Jon Macon** **EZSR**



# சிலுவையும் சபையும்



....சென்ற மாத தொடர்ச்சி

தெற்கு அர்கான்ஸ் மாநிலத்தில் ஒரு இரவு நற்செய்திக் கூட்டத்தில் நான் பிரசங்கித்து முடித்த பின்பு, ஒரு உருக்கமான சம்பவத்துடன் ஒரு பெண் என்னை நோக்கி வந்தாள். தனக்கு நான்கு வயதாயிருக்கும்போது, டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள டல்லஸ் என்ற இடத்தில் வாழ்ந்த சமயத்தில் நடந்த ஒன்றைப்பற்றி சொன்னாள். அச்சமயத்தில், அவருடைய குடும்பம், போக்குவரத்து மிகுந்த ஒரு நெடுஞ்சாலையருகில் குடியிருந்தனர். அவர்களுடைய வீட்டிற்கு வெளியே, குழந்தைகள் விளையாடுவதற்காக ஒரு சிறிய இடமிருந்தது. ஒரு நாள் மாலைப் பொழுதில், அவளும், அண்டை வீடுகளைச் சேர்ந்த குழந்தைகளும் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது, பந்து, திடீரென எழும்பி, நெடுஞ்சாலையில் உருண்டோடியது என்று சொன்னாள். கொஞ்சமும் யோசிக்காமல் அவள் பந்தின் பின்னே ஓடினாள். அதை எடுக்க கிட்டச் சேர்ந்த போது, அந்த வழியே ஒருபெரிய லாரி பாய்ந்து வருவதைப் பார்த்து, பயத்தால் உறைந்து போனாள். அப்பொழுது, ஒன்பது வயது நிரம்பிய அவளுடைய சகோதரன், அவள் நெடுஞ்சாலையில் ஓடுவதைப் பார்த்தான். அவன் வரும் லாரியையும் பார்த்தான். அவளைப்பாதுகாப்பாக மீட்டுவிட வேண்டுமென்று நம்பிக்கையோடு அவளுக்குப் பின்னே மின்னல் வேகத்தில் சென்றான். அவன் அந்த லாரிக்கு முன்னால் சென்று, ரோட்டிலிருந்து மரணத்திலிருந்து அவளைக் காப்பாற்றினான். அச்சிறுவனுக்கு, தனது சின்னத் தங்கையைக் காப்பாற்றுவது அந்த சொற்ப நேரம் போதுமானதாக இருந்தது. ஆனால், தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்வதற்குப் போதுமானதாக இல்லை. அந்த லாரி அவன் மீது மோதி, உடனடியாகக் கொன்று போட்டது.

அந்த சோக சம்பவத்தைக் குறித்து தனக்கு அதிகமாக நினைவில்லையென்றும், ஆனால், தனது சகோதரனின் உயிரற்ற சரீரம் அச்சாலையிலிருந்து எடுக்கப்பட்டு, ஆம்புலன்ஸ் வாகனம் வந்து வெளியே கொண்டு செல்லும் வரை வீட்டின் முற்றத்தில் வைக்கப்பட்டிருந்தது என்று சொன்னாள். மேலும், ஆழமான பொருளைத் தரும் வார்த்தைகளால் *என் சகோதரன் எனக்காக மரித்தான்* என்று கூறினாள். அவள் ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவள். ஆனால் இன்றைக்கு அவள் வாழ்வுக்கான தருணமும், சபையில் அவளுடைய சேவையும், பல ஆண்டுகளுக்கு முன்பு அவன் சகோதரன் செய்த தியாகத்தால் உண்டாக்கப்பட்டது,

இது போன்று, ஆனால், இதைவிட இன்னும் ஆழமான அர்த்தத்தில், சபையானது, இயேசுவின் தியாகத்திலிருந்து ஜீவனைப் பெற்றுக் கொள்கிறது. அவருடைய மரணமானது, நாம் ஜீவனில் பிரவேசிப்பதற்கான தருணமாக மாத்திரம் இராமல், அந்த ஜீவனுக்கான ஆதாரமாகவும் உள்ளது. அவருடைய மரணம் நமக்கு கிருபாதார பலியாகவும், நமது கடந்த கால பாவங்களை மன்னிக்கும் வழியாகவும் உள்ளது. இயேசு இந்த பூமிக்கு வந்து, தேவனாகவும்,மனிதனாகவும் நமக்குள்ளாக நடந்து, அவருடைய மரணத்தினாலே, தமக்கென்று அவருக்குச் சொந்தமான ஜனத்தை கிரயமாக்கிக் கொண்டார்.(1.பேதுரு.2:2:9) சபையானது, செங்கற்களாலும், சுண்ணாம்பு கலவையாலும் உண்டானதல்ல. மாறாக, இரத்தத்தால் வாங்கப்பட்ட மக்களைக் கொண்டது.

கிறிஸ்துவின் தியாகத்திற்கு நாம் மூன்று வழிகளில் பதில் கொடுக்கிறோம். முதலாவது, கிறிஸ்து, சிலுவையில் நமக்காகச் செய்ததை சரியான முறையில் உணர்ந்து, சிலுவையை ஏற்றுக்கொள்கிறோம். மீட்கப்பட்டவர்கள், கிறிஸ்துவின் ஈவாகிய கிருபைக்காக, நன்றியுடன் மகிழ்ச்சியடைகிறார்கள். பரலோக மகிமையுடன், கிறிஸ்து ஐசுவரிய சம்பன்னராக இருந்தார். இருப்பினும், நமது நிமித்தம் பரலோகத்தை விட்டு, மனிதனாக வந்து ஏழ்மையானார். அவருடைய தரித்திரத்தால், நாம் ஆவிக்குரிய விதத்தில், ஐசுவரியவான்களாகும்படி அப்படிச் செய்தார்.(2.கொரி.8:9). இரண்டாவதாக, அவருடைய மரணத்தினால் கிடைக்கும் நன்மைகளை ஏற்றுக்கொள்வதினாலே அதற்கான கிரியை நடப்பிக்கவேண்டும். உண்மையானமதிப்பு காட்டுதல், முறையான ஏற்றுக்கொள்ளுதலுக்கு வழிகாட்டும். கிறிஸ்துவை விசுவாசித்துக் கீழ்ப்படிவதன் மூலம், நம்முடைய வாழ்க்கையில் அவருடைய மரணத்தினால் கிடைக்கும் நன்மையைப் பெற்றுக்கொள்கிறோம். (ரோமர்.6:1-4) அவர் எல்லோருக்காகவும் மரித்தார். (எபி.2:9) ஆனால், அவருக்குக் கீழப்படிகிறவர் மாத்திரம் அவருடைய மரணத்தினாலுண்டான நன்மையை பெற்றுக்கொள்கிறார். (எபி.5:8-9). மூன்றாவதாக, நம்முடைய அளவுகடந்த சேவையால், அவருடைய தியாக மரணத்திற்கு பதில் செய்ய வேண்டும். (1.கொரி.15:58). உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள், ஆவி, ஆத்துமா, சரீரம், (1.கொரி.6:19,20). அதைப் போல, இப்பூமியில் நமது பணி என்னவெனில், அவர் வடிவமைத்து, வழி நடத்தி, அவர் மகிழ்ச்சி கொள்ளுகிறபடி சேவை செய்வதுதான்.

## சிலுவையால் சுத்தகரிக்கப்படுகிறது.

இரண்டாவது, சிலுவை தொடர்ந்து சபையை சுத்திகரிக்கிறது. அதன் சுத்திகரிக்கும் வல்லமை தேவனுடைய ஜனங்கள் மூலம் தினந்தோறும் சுரந்து வருகிறது. எப்படி, இரத்தம் நமது சரீரத்தில் நமது சரீரத்தின் ஊடே ஓடி, நம்மைச் சுத்திகரித்து, தாங்கி நிற்கச் செய்கிறதோ, அதுபோலவே, இயேசுவின் விலையேறப்பட்ட இரத்தம், அவருடைய ஜனங்களின் ஊடே ஓடி, ஜீவ பெலனைத் தந்து தாங்குகிறது.

நாம் இரட்சிக்கப்படுவது மாத்திரம் போதாது, நாம் இரட்சிக்கப்பட்ட நிலைமையில் நிலைத்திருப்பது அவசியம். ஒரு பாவி, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு, தேவ கிருபையின்படி கிறிஸ்துவுக்குள்ளாக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், சபையானது சிருஷ்டிக்கப்படுகிறது. ஒரு கிறிஸ்தவன் தினந்தோறும் ஒளியில் நடக்கும்போது, கிறிஸ்துவின் இரத்தத்தால் தொடர்ந்து சுத்தகரிக்கப்படுகிறான். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். *(1.யோவா.1:7)* யோவான், இங்கே சுத்திகரித்து என்ற வார்த்தையை, நிகழ்கால செய்வினையாக கிரேக்க மொழியில் குறிப்பிடுகிறார். அதன் பொருள், ஒரு நிலையான தொடர்ச்சியான, நிகழுண்மை சுத்திகரிப்பாகும்.

பாவமற்றவனாக இருக்க விரும்பி, அனுதினமும் கிறிஸ்துவில் வளர்ந்தாலும், ஒரு கிறிஸ்தவன் பூரணமாக்கப்பட்டவனல்ல அவன் தவறு செய்யாதவனாகவும் இல்லை. ஆனால் அவன் குற்றமற்றவனாயிருக்க வேண்டும்.

ஒரு பாவியின் ஜீவியத்தில் பாவமிருப்பது, கிறிஸ்துவின் இரத்தம் மூலம் இரட்சிப்பை அவசியப்படுத்துகிறது. ஒரு பரிசுத்தவானின் ஜீவியத்தில் பாவமிருப்பது, அவனோ அல்லது அவளோ கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை அவசியப்படுத்துகிறது. பாவமன்னிப்புக்காக அவசியம் இப்பூமியில் இல்லை என்ற நிலை நமக்கு ஒருபோதும் வராது.

நம்முடைய குழந்தைகள், சிறுவர்களாயிருக்கையில், அவர்கள் சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்வதை கவனிப்பது உற்சாகமான ஒன்றாக இருந்திருக்கும். இப்புதிய திறமையை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு, இரண்டு ஆரம்ப பிரச்சினைகளை அவர்கள் சந்திக்க வேண்டியிருந்திருக்கும். ஒன்று சைக்கிளில் ஏறி அமர்வது, இரண்டு அது கீழே விழாமல் பார்த்துக் கொள்வது. ஒரு குழந்தை சொன்னதுபோல், நீங்கள் தொடர்ந்து ஓட்டமுடியும் அல்லது கீழே விழ முடியும் முதல் காரியம் அவர்களுக்கு சுலபமானது, சீட்டின் மீது ஏறி உட்கார்ந்து, ஒரு காலை பெடலின் மீது வைத்து நகருவதற்கு தள்ளுவது. ஆனால் இரண்டாவது காரியம் கடினமானது, சைக்கிள் கீழே சாயாமல், நேராக இருக்குமளவிற்கு அதை வேகமாகச் செலுத்துவது. இந்த இரண்டாவது காரியத்தில் தோற்றுப்போவது, ஆபத்தை ஏற்படுத்தி, ஓட்டுபவருக்கு காயத்தை உண்டாக்கும்.

சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்வதுபோன்று, இரட்சிப்பில் இரண்டு படிகள் அடங்கியுள்ளதை பார்க்கலாம். முதலாவது, ஒரு பாவி, தேவனிடத்தில் சரியான உறவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அதன்பிறகு, அந்தச் சரியான உறவில் நிலைத்திருக்க வேண்டும். சரியான உறவை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானது, ஆனால் அது ஆரம்பம்தான். ஒருவனை ஆரம்ப நிலையில், எந்தவொரு காரியம் பாவியாக்கினதோ, அவனுடைய வாழ்க்கையின் பாவக் கறையானது- அவன் கிறிஸ்தவனான பின்பு தொடர்ந்து சுத்திகரிக்கப் படவில்லையென்றால்-அதே காரியம் அவனை குற்றப்படுத்த முடியும். *(அப்.8:22)* அவன் கிறிஸ்தவனாவதற்கு முன்பு, அவனுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுவது அவசியமானால், அவன் கிறிஸ்தவனான பின்பு, நரகத்திற்கு ஏதுவான எந்தவொரு பாவத்தையும் அவன் செய்யும்போது அவனுக்கு இரட்சிப்பு அவசியப்படாது என்று வாதிடுவது சரியாக இருக்காது. எருசலேமுக்கு வெளியே, தேவனுடைய குமாரனின் வேதனை மிகுந்த சிலுவை மரணத்தினாலேதான், தனது மீட்பு வாங்கப்பட்டது என்பதை ஒரு தேவனுடைய பிள்ளையால் மறக்க முடியாது. சர்வவல்லமையுள்ள தேவன் தன்னுடைய குமாரனின் தியாகத்தால் மாத்திரமே, பாவ நிவாரணத்தை உண்டுபண்ண முடிந்தது. விலை மிகுந்த இந்த நிகழ்வு, உணர்வு, அறிவும், உள்ள ஒவ்வொரு மனிதனும் பாவத்தை வெறுத்து, புறக்கணிக்கும்படி நிர்ப்பந்திக்க வேண்டும்.

சிலுவையானது, கிறிஸ்தவர்கள் தங்களை முழுமையாக கிறிஸ்து பூமிக்கு வந்ததின் நோக்கத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படி கட்டாயப்படுத்துகிறது. கிறிஸ்தவர்கள் தேவனுக்குச் சேவை செய்வதற்கு மற்ற மக்களுக்கு உதவி செய்வதற்கு தேவையான காரணத்தையும், பெலனையும் சிலுவை கொடுக்கிறது. பவுலடியார், கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன் என்று கூறுகிறார். *(ரோமர் 1:14)*. இன்னும் கூட ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையாலே இருக்கிறேன். அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. அவர்களெல்லாரிலும் நான்அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்;ஆகிலும் நான் அல்ல என்னுடைய இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது *(1.கொரி.15:10)*. தேவன் சிலுவையில் தனக்காக என்ன செய்தார் என்பதை உண்மையாகவே புரிந்து அதை உணர்ந்து கொண்ட ஒருவனை விட, எந்தவொரு கிறிஸ்தவனும், கிறிஸ்துவின் பணிக்காக உந்துதலைப் பெற்றிருக்க முடியாது.

இருதயமில்லாத ஒருவனை, ஒரு பெண் மணந்துகொண்ட ஒரு பழைய கதை உண்டு. தான் பொறுப்பற்ற ஒருவனோடு வாழ வேண்டியிருந்தாலும் கூட திருமணத்திற்காகக் கொடுத்த வாக்குறுதியினிமித்தம் ஒரு நல்ல மனைவியாக இருக்க வேண்டுமென தீர்மானித்துக்கொண்டாள். கணவனுக்காக உணவு சமைத்தாள், துணிமணிகளைத் துவைத்தாள், வீட்டையெல்லாம் சுத்தம் செய்தாள். ஒரு மனைவி செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்ற எல்லாக் காரியங்களையும் செய்தாள். ஆனால் எதிலும் அவள் சந்தோஷத்தைக் காணவில்லை. அவளுக்கு வேலை வாழ்க்கையென்றாகி, அதற்கான பலனுமன்றி, குறைவான மகிழ்ச்சியோடிருந்தாள். ஒரு கட்டத்தில் கணவன் இறந்தான், சிறிது காலம் கழித்து, அவள் மறுமணம் செய்து கொண்டாள். அவளுடைய இரண்டாவது கணவன் முதல் கணவனுக்கு நேர் எதிர், அவன் அன்புடையவனாகவும் மச்சுபவனாகவும், ஊக்கப்படுத்துகிறவனாகவும் இருந்தான். அவள் மரித்துப்போன தன்னுடைய முதல் கணவனுக்கு எப்படிப்பட்ட மனைவியாயிருந்தாளோ அதைப் போலவே இப்பவும் இருந்தாள். இன்பம் கண்டாள். தனது முதல் திருமணத்தில், தனது கடமையினிமித்தம் நல்ல மனைவியாக இருந்தாள். ஆனால், . இரண்டாவது திருமணத்தில் சந்தோஷத்தினிமினித்தம் நல்ல மனைவியாக இருந்தாள். ஆ! அன்பு எவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

கிறிஸ்துவின் சபையானது, கர்த்தருடைய கட்டளைகளை கவனமாகக் கைக்கொள்ளுகிறது. அவருடைய விருப்பங்களைச் செய்து, திட்டங்களை நிறைவேற்றுகிறது. ஆனால், கீழ்ப்படிதலான, பாரமான ஒன்றாகப் பார்ப்பதில்லை. அதற்குக் காரணம் அவருடைய அன்பு நெருக்கி ஏவுவதும், அவருடைய கிருபையின் உள்ளான ஏவுதலும்தான் நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்பு கூறுவத்ாம். அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல *(1.யோவா.5:3)*

கிறிஸ்து உனக்கு என்ன செய்தார் என்பதை மனதில் வைத்துக்கொள். அவர் உனக்காகச் செய்த தியாகத்தை தினந்தோறும் நினைத்துகொள். அவருடைய இரட்சிப்பின் ஈவைப் பற்றிய கவனமான சிந்தனை ஒவ்வொரு நாளிலும் உன்னை அவருடைய சாயலில் மாற்றமுடியும். இன்னும், அவருடைய கிருபையின் இராஜ்ஜியத்தில் அன்பின் பணிகள் செய்ய உன்னை வழி நடத்தும்.

**தமிழில். EZSR**

## ஆதியாகமத்தில் கிறிஸ்து

| | |
|---|---|
| 1. உலக இரட்சகர் வரவிருக்கிறார். | *3:15* |
| 2. ஆபிரகாமின் சந்ததியிலிருந்து வருவார் | *28:14* |
| 3. சமாதான கர்த்தர் யூதா கோத்திரத்திலிருந்து தோன்றுவார். | *49:10* |

# இச்சை என்ற பாவம்

அநேக நூற்றாண்டுக்களுக்கு முன் லூசியன் என்பவர் சொன்னார். ஒரு **காலத்தில் வெட்கம் என்பதே இல்லாத அல்லது மறைந்து போன பூமியில் வாழப்போகிறோம்.** டெமெஸ்தனிஸ் சொன்னது, *நாம் சந்தோசத்திற்காக இளம் பெண்களையும், ஒவ்வொரு நாளின் சரீரத் தேவைகளுக்கு மறுமனையாட்டிகளையும் முறைப்படியான பிள்ளைகைகளுக்காக மனைவிகளையும் வைத்துக்கொள்ள வேண்டுமென்றாராம்.* ரோமன் செனேக் எழுதியுள்ளது. ரோமானிய பெண்கள் விவாகரத்து செய்வதற்காக திருமணம் செய்கிறார்கள். திருமணம் செய்வதற்காக விவாகரத்து செய்கிறார்கள். கற்பு என்பது அசிங்கமானது. அறியாமை என்பது இல்லவே இல்லை. அது தோன்றவேயில்லை என்று எழுதியுள்ளராம்.

அஞ்ஞானிகளுடைய ஜீவியத்தில் ஒழுக்க சீர்கேடுகள் நிறைந்து காணப்படுகிறது. இன்றைக்கும் இவைகளின் மாறுபாடு கிடையாது.பவுல் எழுதுகிறார். மாம்சம் ஆவிக்கு எதிராகவும், ஆவி மாம்சத்துக்கெதிராகவும் இச்சிக்கின்றது *(கலா.5:17)* இச்சை என்ற வார்த்தைக்கு, தீவிரமான ஆசை தாறுமாறான பற்றுதல், வெறித்தனம் என்று சொல்லலாம். வசனத்தில் காணப்படும் வித்தியாசப்பட்ட இச்சைகளை ஆராய்ந்து பார்ப்போம். உதாரணமாக *மாம்சத்தின் இச்சை* உண்டு. ஆத்துமாவுக்கு விரோதமாக யுத்தம் செய்யும் மாம்ச இச்சைக்கு விலகி இருங்கள். *(2பேதுரு.2:11)*நாம் உண்பதில், குடிப்பதில், பணத்தில், பதவியில், அந்தஸ்தில், புகழில், போதை மருந்தில் வெறிக்கொண்டிருக்கிறோம்.யோவான் எழுதுகிறான் *கண்களின் இச்சை (1யோ.2:16)* விபச்சாரம் நிறைந்த கண்களையுடையவர்கள் என்று பேதுரு எழுதுகிறார். *(2பேது.2:14) ஒரு ஸ்தீரியை இச்கையோடு பார்க்கிறவன். அவளோடு இதயத்தில் விபச்சாரம் செய்தவனாகிறான்.* (மத்.5:28) என்று இயேசு சொல்லியிருக்கிறார். சாலமோனுக்கு இந்த கண்களின் இச்சையினால் மனவேதனையிருந்தது. அவன் கண்கள் எவைகளை விரும்பியதோ அவைகளை விலக்கவில்லை*(பிரசங்கி.2:10)*.

இரண்டாவதாக இச்சைக்கு என்னவெல்லாம் காரணமாயிருக்கிறது? பிசாசு பிரதானமான ஒரு காரணம் இயேசு யூதர்களைப்பார்த்துச் சொன்னார், ***நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்.*** (யோ.*8:44*)உலக {øh (Fashion) இச்சைகளை உண்டுபண்ணும் காரியங்களாக இன்றைக்கு இருக்கிறது.ஆகவே தான் பவுல் பெண்களைப் பார்த்துச் சொல்லுகிறார் ***உலக நடையின்படியாக*** தங்களை அலங்கரித்து பிறருடைய இச்சைகளை தூண்ட வேண்டாம் என்று *(1தீமோ.2:9)*

மூன்றாவதாக, எப்படி நாம் இந்த இச்சையை ஜெயம் கொள்ளவது? நாம் நம்முடைய மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறையவேண்டும் (கலா.5:24) நாம் மறுபடியும் பிறக்க வேண்டும். ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்து தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்.(யோ.3:3-5) அதன் பிறகு இந்த உலகில் தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி (தீத்து.2:12) இதுவே ஒவ்வொரு மனிதனுடைய மனதையும் கட்டுப்படுத்தும். மனிதனுடைய இருதயம் எப்படியோ அப்படியே அவனும் இருக்கிறான்.(நீதி.23:7).இச்சையானது, சுயக்கட்டுப் பாட்டினால் ஜெயங்கொள்ளமுடியும். பவுல், *மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாத படிக்கு, என் சரீரத்தை ஒடுக்கி க் கீழ்ப்படுத்துகிறேன்* என்கிறார்(1கொரி.9:27) இறுதியாக, அடக்கப் படாத இச்சைகளால், கொலைகளும் கற்பழிப்புகளும் இன்றைய உலகில் நிறைந்து காணப்படுகிறது. விபச்சாரங்கள் சமுதாயத்தை பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது.

இன்றைய உலகில், ஏசாயா சொன்னவைகளை பார்க்கிறோம், *தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும் , வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!* (ஏசா.5:20)எது தீமையாக இருக்கிறதோ அதை நன்மையென்கிறது இன்றைய உலகம். இன்றைய சமுதாயம், எது நன்மையாயிருக்கிறதோ, அதை தீமையென்று தீர்மானிக்கிறது எவ்வளவு துக்கமானது பாருங்கள். எஸ்றா துக்கத்தோடே சொல்லுகிறார். *என் தேவனே, நான் என் முகத்தை என் தேவனாகிய உமக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கலங்குகிறேன். எங்கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்கு மேலாகப் பெருகிற்று. எங்கள் குற்றம் வான பரியந்தம் வளர்ந்து போயிற்று* (எஸ்றா.9:6)

ஜனங்களுடைய அவபக்தி நிறைந்த இச்சைகள் வெட்கிக் கலங்குவதாக சொல்லப்பட்டுள்ளது. இன்று நாம் வெட்கப்பட்டு கலங்குவதற்கு நமக்கு உணர்வில்லை. காரணம் அருவருப்பானதும், அசிங்கமானதும் இன்றைய உலகில் நடைமுறைகளாகி விட்டது. யூதா 7-ன் எச்சரிக்கையை பாருங்கள் *அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும்...... தங்களை விபச்சாரம் பண்ணி, அந்நிய மாம்சத்தை தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.* அன்றைக்கு மாத்திரமல்ல இன்றைக்கும் இது பொருந்துகிறதல்லவா! முடிவாக, சில ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த அதிர்ச்சிக்குரியவைகளை இன்று நாம் சிரித்து மகிழ்ந்து, கண்டு ரசித்து அவைகளால் மகிழ்ச்சியூட்டப்படுகிறோம். நம்முடைய இருதயங்களை விட்டு தேவனை பிடித்து தள்ளி வெளியேற்றிவிட்டோம். பாவம் என்றால் அது பெலவீனம். அது ஒரு நோய் என்றும்- மதுபான வெறிகொள்ளுதலை - அல்லது குடிபோதைக்கு அடிமையென்றும் ஒழுக்க சீர்கேடான வாழ்க்கையை மாற்றம் பெற்ற வாழ்க்கை முறை என்றும் பால் உணர்வு சீர்கேடுகளை. இன்றைய புதிதான ஒழுக்க முறை என்றும் உலகம் சொல்லி தன்னை சீரழித்துக் கொண்டு அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இந்த இச்சையை ஒழிக்க, ஜெயங்கொள்ள ஒரே ஒரு வழிதானுண்டு. ஒழுக்கங்கெட்ட சமுதாயத்தினர் மனந்திரும்ப வேண்டும்.

வே.தானியேல் துரைராசன்

## விசுவாசத்தின் அடிப்படைகள்
## பாடம் - 3

### ஏ) மேலான ஒழுக்க நெறிகள்:

1. இயேசு சொன்னார் — மத்தேயு 5:44
2. இயேசு சொன்னார் — மத்தேயு 16:24
3. பவுல் சொன்னது — கொலோ 3:1,2
4. யாக்கோபு சொன்னது — யாக்கோபு 1:2
5. இவைகள் மனிதர்களுடைய புத்திமதிகள் போலாவ ா கேட்கிறது. ஆவிக்குரிய காரியங்களில் தேவ வார்த்தையாகிய வேதத்தைத் தவிர ஒரு நிலையான அதிகாரமாக ஏற்றுக்கொள்ள வேறு ஏதாவது இருக்கிறதா.

### மனிதனுடைய பாரம்பரியங்களும் பழக்க வழக்கங்களும்:

1. இன்றைக்கு இருக்கிற பிரிவினைக் கூட்டத்தில் குழந்தைகள் ஞானஸ்நானம், மாதத்தில் ஒரு நாள் கர்த்தருடைய பந்தி, ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துவது, இவைகள் எல்லாமே மனிதர்களுடைய பாரம்பரியங்களே.
2. அதை முதல் நூற்றாண்டு சபையோடு ஒப்பிட்டுப்பாருங்கள். அப். 17:11
3. மனிதர்களுடைய பாரம்பரியம்.
4. இயேசுவின் எண்ணம் என்ன? மாற்கு 7:7-9
5. மனிதர்களுடைய பாரம்பரியங்களையும், பழக்கவழக்கங் களையும் குறித்து அப்போஸ்தலனாகிய பவுலின் எண்ணம் என்ன?கொலே. 2 :8

இந்த தகவலை உறிஸ்டாரி& மிஸ்டர் ஆப் ரிலிஜன் துருதி என்ற புத்தகத்திலிருந்து. ஏஜஸ் - ஆசிரியர்.
ஜே. போர்ட்டர் வில்ஹைட் - ஸ்டரார் பப்ளிகேஷன்ஸ்
ஃ போர்டஓர்த்

மகா பரிசுத்தமுள்ள உமக்கு எங்களால் கொடுக்க முடிந்த எல்லா ஆலோசனைகளிலும் மிக முக்கியமானதை கடைசிவரை இரகசியமாகவே வைத்திருக்கிறோம். நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியதில் நாம் நமது கண்களை நன்றாகத் திறந்ததும், நாம் சிந்திக்கப் போகிற வேலையில் எல்லா வல்லமையோடும் தலையிடவேண்டும். சுவிசேஷம் வாசிக்கப்படுவது எவ்வளவு குறைவாக அனுமதிக்கப்பட முடியுமோ அவ்வளவு குறைவாக அனுமதிக்கப்பட வேண்டும். (விசேஷமாக நவீனமான பாஷைகளிலும் உம்முடைய அதிகாரத்தின் கீழுள்ள நாடுகளிலும்) பொதுவாக ஆராதனையில் வாசிக்கப்படுகிற மிகக் குறைந்ததே போதுமானது, வேறு எங்கும் சுவிசேஷம் எவரும் வாசிக்க தடை விதிக்க வேண்டும் (மக்கள் எதுவரை அந்த குறைந்த அளவோடு திருப்தி அடைகிறார்களோ அதுவரை நம்முடைய நலன் பெருகும். ஆனால் மக்கள் எந்த சமயத்திலிருந்து, அதிகம் வாசிக்க ஆசைப்படுகிறார்களோ அது முதல் நம்முடைய நலன் பாதிக்கப்படும்).

இந்த புத்தகம் புயலென நமக்கெதிராக எழும்புகிற எந்த முரட்டாட்டமுள்ள மனிதனைவிடவும் நமக்கு நஷ்டத்தைக் கொண்டு வருவதில் ஆபத்தானது. உண்மையாகவே யாராவது வேதத்தை மிகவும் படித்து தமது சபைகளில் நடக்கிறவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அவன் விரைவில் தம்முடைய போதனைகளிலுள்ள முரண்பாடுகளையும், மிகவும் அதிகமாக அவைகள் வேதத்திற்கு எதிராகவும் இருப்பதைக்கண்டு கொள்வான்.

ஜனங்கள் இதைக் கண்டுணர்ந்தார்கள் சகலமும் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படும் வரை நம்மைத் தொல்லை செய்வதில் ஓய மாட்டார்கள். பிறகு அவர்கள் முன் நாம் கேலிப்பொருளாகவும், உலகம் முழுதும் வெறுக்கப்படுகிறவர்களாகவுமாவோம். மிகவும் ஞானமாக தொல்லைகளைத் தூண்டி விட்டு விடாதபடி அவர்களுடைய கரங்களிலிருந்து பைபிளைப் பிடுங்க வேண்டியது அவசியம்.

*(இவ்வாலோசனை 1550-ம் ஆண்டில் போப் ஜூல்ஸிக்கு அவருடைய கார்டினல்களால் சொல்லப்பட்டது. அது பிரான்சின் பாரிசில் உள்ள பப்ளியோதெக்கில் காணப்படுகிறது. அந்தப்புத்தகம் ரிசர்வ் 22719 பக்கம் 101-102.*

*5. பழக்க வழக்கங்களையும் மனிதர்களுடைய பாரம்பரியங்களைக் குறித்தும் அப்போஸ்தலனாகிய பேதுருவினுடைய எண்ணமென்ன?*

*1பேதுரு 1 :18*

**G. தானியேல்** **CHARLES DI PALMA**



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***
***Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Designing by.
Arthi Computers. 811, C.P.Complex, Brough Road, Erode-1 ✆ : 260971

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள
விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண் – 27, காங்கேயம் – 638 701.

வெளியிடுவோர்
**கிறிஸ்துவின் சபையார்,**
தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,